சுருக்கம்

கால்நடை பராமரிப்புத்துறை – தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் – மாநில புதுமை நிதியின் கீழ் ரூ.821.11 இலட்சத்தில் தஞ்சாவூரில் இனவழி கால்நடை மூலிகைப் பொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைத்தல்–ஒப்பளிப்பு–ஆணை வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்(கா.ப.6) துறை

அரசாணை (நிலை) எண்.56

நாள் 02.03.2017
துன்முகி வருடம், மாசி 18
திருவள்ளுவர் ஆண்டு 2047
படிக்கப்பட்டது:

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்களின் கடித எண்.6144/எப்/2016, நாள் 26.7.2016 மற்றும் 25.10.2016.

*****

ஆணை :

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகப் பதிவாளர் அவர்கள், திருத்த வரவு செலவுத் திட்டம் 2016–2017–ல், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறையின் 2016–2017ஆம் ஆண்டிற்கான விரிவான மானியக் கோரிக்கையில் (கோரிக்கை எண்.6.03) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு தஞ்சாவூரில் இனவழி கால்நடை மூலிகைப் பொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைப்பதற்கு மாநில புதுமை நிதியின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட தொகையான ரூ.8,21,11,000/–த்தினை விடுவிப்பு செய்யும்படி அரசைக் கோரியுள்ளார்.

2. மேலே பத்தி 1–ல் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்களின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து மாநிலப் புதுமை நிதியின் கீழ் தஞ்சாவூரில் இனவழி கால்நடை மூலிகைப் பொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைப்பதற்கான ரூ.8,21,11,000/– (ரூபாய் எட்டு கோடியே இருபத்தியொரு இலட்சத்து பதினொன்றாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகின்றது.

3. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

"2415 – வேளாண்மை ஆராய்ச்சியும் கல்வியும் – 03 – கால்நடை வளர்ப்பு–004– ஆராய்ச்சி – பன்னிரண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JB மாநில புதுமை நிதியின் கீழ் தஞ்சாவூரில் இனவழி கால்நடை மூலிகைப் பொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைத்தல் – 09 – உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (த.தொ.கு 2415 03 004 JB 0932)"

மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் மாநில புதுமை நிதியின் கீழ் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் நேர் செய்யப்படும்:

"2415 – வேளாண்மை ஆராய்ச்சியும் கல்வியும் – 03 – கால்நடை வளர்ப்பு–902– கழிக்கவும் – மாநில புதுமை நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை – பன்னிரண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JA கழிக்கவும் – மாநில புதுமை நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை – 30 கணக்குகளிடையே மாற்றம்
(த.தொ.கு 2415 03 902 JA 3008)"

மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் எதிர் பற்று (contra debit) வைக்கப்படும்.

" J காப்பு நிதிகள் (b) வட்டி பெறா காப்பு நிதிகள் – 8229 00 மேம்பாடு மற்றும் நல நிதிகள் – 200 ஏனைய மேம்பாடு மற்றும் நலநிதிகள் – BE மாநில புதுமை நிதி
(த.தொ.கு 8229 00 200 BE 0006) (out go)"

4. மேலே பத்தி 2–ல் ஒப்புதலளிக்கப்பட்ட தொகையை உரிய பட்டியலிட்டு, சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம், சென்னை–35–இல் தாக்கல் செய்தது, காசோலையைப் பெற்று தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் நிதி அலுவலரிடமிருந்து உரிய முத்திரைப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொண்டு வழங்க கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

5. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கணக்குகளை தணிக்கை செய்ய இந்தியத் தணிக்கை மற்றும் கணக்குத் துறைக்கு அதிகாரம் உள்ளதால், பல்கலைக்கழகப் புத்தகம் மற்றும் கணக்குகளை பார்வையிட அத்துறைக்கு உரிமை உண்டு எனவும் தெரிவிக்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதி, துறையின் அ.சா.கு.எண்.6519/2017 கா.ப,பா.வ(ம)மீ/16, நாள்.27.2.2017 இசைவுடன் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
✓துணைவேந்தர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை– 51
பதிவாளர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை–51
இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை – 6
முதன்மை கணக்குத் துறை தலைவர் (தணிக்கை–1), சென்னை –18
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை –18/18 (பெயரில்)
முதுநிலை துணை மாநிலக் கணக்காயர், சென்னை – 18
தணிக்கைத் துறை தலைவர் (தணிக்கை–2), சென்னை–18 (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35 (பெயரில்)
இயக்குநர் (உள்ளாட்சி), நிதித் தணிக்கை, சென்னை –108
இருப்பு கணக்கு அலுவலர், சென்னை – 9
நகல்:
நிதித் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் (மற்றும்) மீன்வளம்) துறை, சென்னை –9
இ.கோ./உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

6/3/2017
பிரிவு அலுவலர்

6/3/17

24A
OFFICE OF THE DIRECTOR OF RESEARCH
22 SEP 2017
3475
TANUVAS, CHENNAI-51

சுருக்கம்

கால்நடை பராமரிப்புத் துறை – தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் – திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2017–2018 – தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு இரண்டாவது தவணையாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.4,81,42,000/–ஐ விடுவித்தல் –ஆணை வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்(கா.ப.6) துறை

அரசாணை (நிலை) எண்.159

நாள் 08.08.2017
ஹேவிளம்பி வருடம், ஆடி 23
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.56, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (காப.6) துறை, நாள் 02.03.2017.
2. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்களின் கடித எண். 6132/எப்–1/2017, நாள் 17.04.2017.

*****

ஆணை :

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அரசாணை (நிலை) எண்.56, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வள(கா.ப.6) துறை, நாள்.02.03.2017–ல் மாநில புதுமை நிதியின் கீழ் தஞ்சாவூரில் இனவழி கால்நடை மூலிகை பொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைப்பதற்கு ரூ.8,21,11,000/–ஐ ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகப் பதிவாளர் அவர்கள், வரவு செலவுத் திட்டம் 2017–2018–ல், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறையின் 2017–2018ஆம் ஆண்டிற்கான விரிவான மானியக் கோரிக்கையில் (கோரிக்கை எண்.6.03) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு தஞ்சாவூரில் இனவழி கால்நடை மூலிகைப் பொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைப்பதற்கு மாநில புதுமை நிதியின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட இரண்டாவது தவணைத் தொகையான ரூ.4,81,42,000/–ஐ விடுவிப்பு செய்யும்படி அரசைக் கோரியுள்ளார்.

3. மேலே பத்தி 2–ல் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்களின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து மேற்சொன்ன திட்டங்களுக்கு, இரண்டாவது நிலுவைத் தொகையாக 2017–2018ம் ஆண்டிற்கு ரூ.4,81,42,000/–(ரூபாய் நான்கு கோடியே என்பத்தொரு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

4. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2415–வேளாண்மை ஆராய்ச்சியும் கல்வியும் –03–கால்நடை வளர்ப்பு–004–ஆராய்ச்சி – பன்னிரண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத்திட்டம் –JB மாநில புதுமை நிதியின் தஞ்சாவூரில் இனவழி கால்நடை மூலிகைப் பொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைத்தல் – 09–உதவித் தொகை குறிப்பிட்ட திட்டங்களுக்கான நிதி உதவி–03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை, (த.தொ.கு 2415 03 004 JB 0932)

மேலே, பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் மாநில புதுமை நிதியின் கீழ் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் நேர் செய்யப்படும்.

2415–வேளாண்மை ஆராய்ச்சியும் கல்வியும் – 03 – கால்நடை வளர்ப்பு – 902 – கழிக்கவும் – மாநில புதுமை நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை – பன்னிரண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JA கழிக்கவும் – மாநில புதுமை நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை – 30 கணக்குகளிடையே மாற்றம் (த.தொ.கு 2415 03 902 JA 3008)

J காப்பு நிதிகள் (b) வட்டி பெறா காப்பு நிதிகள்–8229 00 மேம்பாடு மற்றும் நல நிதிகள்–200 ஏனைய மேம்பாடு நலநிதிகள்–கூநு மாநில புதுமை நிதி (த.தொ.கு 8229 00 200 BE 0006) (out go)

5. மேலே பத்தி 3–ல் ஒப்புதலளிக்கப்பட்ட தொகையை உரிய பட்டியலிட்டு, சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம், சென்னை–35–இல் தாக்கல் செய்து, காசோலையைப் பெற்று தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் நிதி அலுவலரிடமிருந்து உரிய முத்திரைப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டு வழங்க கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

6. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கணக்குகளை தணிக்கை செய்ய இந்தியத் தணிக்கை மற்றும் கணக்குத் துறைக்கு அதிகாரம் உள்ளதால், பல்கலைக்கழகப் புத்தகம் மற்றும் கணக்குகளை பார்வையிட அத்துறைக்கு உரிமை உண்டு எனவும் தெரிவிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதி, கா.ப(ம) மீ.வ துறையின் அ.சா.கு.எண்.26338/கா.ப,பா.வ(ம)மீ/16, நாள்.28.06.2017 இசைவுடன் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பதிவாளர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை–51
இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை–6

முதன்மை கணக்குத் துறை தலைவர் (தணிக்கை–1), சென்னை –18
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை –18. (பெயரில்)
முதுநிலை துணை மாநிலக் கணக்காயர், சென்னை – 18.
தணிக்கைத் துறை தலைவர் (தணிக்கை–2), சென்னை–18 (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35 (பெயரில்)
இயக்குநர் (உள்ளாட்சி) நிதி தணிக்கை சென்னை–108
இருப்பு கணக்கு அலுவலர், சென்னை–9.

நகல்
நிதித் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் (ம) மீன்வளம்) துறை, சென்னை –9
இ.கோ./உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

17/8/2017

பிரிவு அலுவலர்

245 (27B)

28 (G.O.)

சுருக்கம்

கால்நடை பராமரிப்புத்துறை – தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் – வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2018–2019 – தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு தஞ்சாவூரில் இனவழி கால்நடை மூலிகைப் பொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைத்தல் – மூன்றாவது தவணையாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.70,42,000/–த்தினை விடுவித்தல் -- ஆணை வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்(காப6) துறை

அரசாணை (நிலை) எண்.149 நாள்25.07.2018

விளம்பி வருடம் ஆடி 09
திருவள்ளுவராண்டு 2049

படிக்கப்பட்டது:

1. அரசாணை நிலை எண்.56, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (கா.ப.6) துறை, நாள்.02.03.2017.
2. அரசாணை நிலை எண்.159, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (கா.ப.6) துறை, நாள்.08.08.2017.
3. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பதிவாளர்(பொ)அவர்களின் கடித எண்.3925/எப்1–1/2018, நாள் 12.04.2018.

*****

ஆணை :

மேலே முதல் மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில் மாநில புதுமை நிதியின் கீழ் தஞ்சாவூரில் இனவழி கால்நடை மூலிகை பொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைப்பதற்கு முதல் மற்றும் இரண்டாம் தவணைகளாக முறையே ரூ.8,21,11,000/–, ரூ.4,81,42,000/– ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகப் பதிவாளர்(பொ)அவர்கள், வரவு செலவுத் திட்டம் 2018–2019–ல், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறையின் 2018–2019ஆம் ஆண்டிற்கான விரிவான மானியக் கோரிக்கையில் (கோரிக்கை எண்.06–03) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு தஞ்சாவூரில் இனவழி கால்நடை மூலிகைப் பொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைப்பதற்கு மாநில புதுமை நிதியின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட மூன்றாவது தவணைத் தொகையான ரூ70,42,000/–த்தினை விடுவிப்பு செய்யும்படி அரசைக் கோரியுள்ளார்.

3. மேலே பத்தி 2–ல் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்களின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து மேற்சொன்ன திட்டங்களுக்கு,

மூன்றாவது நிலுவைத் தொகையாக 2018–2019ம் ஆண்டிற்கு ரூ.70,42,000/– (ரூபாய் எழுபது இலட்சத்து நாற்பத்திரண்டாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

4. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2415–வேளாண்மை ஆராய்ச்சியும் மற்றும் கல்வியும் –03–கால்நடை வளர்ப்பு–004– ஆராய்ச்சி – மாநில செலவினங்கள் – JB – மாநில புதுமை நிதியின் கீழ் தஞ்சாவூரில் இனவழி கால்நடை மூலிகைப் பொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைத்தல் – 09 – உதவித் தொகை – 03 –குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை,
(கு.தொ.கு 2415 03 004 JB 0932)

மேலே, பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் மாநில புதுமை நிதியின் கீழ் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் நேர் செய்யப்படும்.

2415–வேளாண்மை ஆராய்ச்சியும் மற்றும் கல்வியும் – 03 – கால்நடை வளர்ப்பு – 902 – கழிக்கவும் – மாநில புதுமை நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை – மாநிலச் செலவினங்கள் – JA கழிக்கவும் – மாநில புதுமை நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை – 30 கணக்குகளிடையே மாற்றம்
(கு.தொ.கு 2415 03 902 JA 3008)

J காப்பு நிதிகள் (b) வட்டி பெறா காப்பு நிதிகள்–8229 00 மேம்பாடு மற்றும் நல நிதிகள்–200 ஏனைய மேம்பாடு நலநிதிகள்–BE மாநில புதுமை நிதி
(கு.தொ.கு 8229 00 200 BE 0006) (out go)

5. மேலே பத்தி 3–ல் ஒப்புதலளிக்கப்பட்ட தொகையை உரிய பட்டியலிட்டு, சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம், சென்னை–35–இல் தாக்கல் செய்து, காசோலையைப் பெற்று தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் நிதி அலுவலரிடமிருந்து உரிய முத்திரைப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டு வழங்க கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

6. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கணக்குகளை தணிக்கை செய்ய இந்தியத் தணிக்கை மற்றும் கணக்குத் துறைக்கு அதிகாரம் உள்ளதால், பல்கலைக்கழகப் புத்தகம் மற்றும் கணக்குகளை பார்வையிட அத்துறைக்கு உரிமை உண்டு எனவும் தெரிவிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதி (கா.ப(ம)மீ.வ) துறையின் அ.சா.கு.எண்.21956/கா.ப.மீ/18, நாள் 12.06.2018 இசைவுடன் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. கோபால்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பதிவாளர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை–51.
இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை – 35.

முதன்மை கணக்கு துறைத் தலைவர் (தணிக்கை–1) சென்னை–18.
மாநில கணக்காயர் (தணிக்கை) சென்னை–18 (பெயரில்)
முதுநிலை துணை மாநில கணக்காயர், சென்னை – 18.
தணிக்கைத் துறை தலைவர் (தணிக்கை–2) சென்னை–18 (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35(பெயரில்)
இயக்குநர் (உள்ளாட்சி) நிதி தணிக்கை, சென்னை – 108.
இருப்பு கணக்குத் தணிக்கை அலுவலர், சென்னை–9.
நகல்:
நிதித் (கா.ப.பா.வ (ம) மி) துறை, சென்னை –9.
இருப்பு கோப்பு /உதிரி

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்